

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா ஆகியோர் இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், மாம்பாக்கம் ஊராட்சியில் வசித்து வந்த செல்வம், துரை, ராமலிங்கம், செல்வன். சக்தி, முருகன், ரவி ஆகியோர் திருச்செந்தூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பும் வழியில் திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்ததையடுத்து, இறந்தவர்களின் உடலுக்கு மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தி தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.2 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி, அன்னாரின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் கூறினர். அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. திமிரி ஒன்றியக் குழு தலைவர் அசோக், துணைத் தலைவர் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தாட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (25.9.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பழங்குடியினர் திட்ட அலுவலர்களுடன் துறை தொடர்பான நலத் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் சட்டமன்ற பேரவை அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் ச.அண்ணாதுரை, உயர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஐக்கிய அரபு அமீரகத்தில்

# பாஸ்போர்ட் இல்லாமல் தவிக்கும் இந்தியர்களை மீட்க நடவடிக்கை!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, செப்.27-

ஐக்கிய அரபு அமீரகத்தில் பாஸ்போர்ட் இல்லாமல் தவிக்கும் இந்தியர்களை மீட்க உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர் எஸ்.எஸ். மீரான், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமிக்கு ஒரு மனுவினை சமர்ப்பித்துள்ளார். அம்மனுவில் ஐக்கிய அரபு அமீரக அரசு அந்நாட்டில் பாஸ்போர்ட் உள்ளிட்ட ஆவணங்களை இழந்து தவிக்கும் வெளிநாட்டினர் 01.09.2024 முதல் 30.10.2024 க்குள் எந்தவித தண்டனையோ அல்லது அபராதமோ இன்றி தங்கள் ஆவணங்களை புதுப்பித்துக் கொள்ளலாம் அல்லது தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்லலாம் என்று ஒரு அறிவிப்பை வெளி யிட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆவணங்களை இழந்து தங்கியுள்ளவர்களை நம் நாட்டிற்கு மீட்டுக் கொண்டு வருவதற்கு உதவி செய்யும்படி கோரியுள்ளனர். இம்மனுவினை மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்த டாக்டர் கலாநிதி வீராசாமி இதுகுறித்து ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் எஸ். ஜெயசங்கர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

ஐக்கிய அரபு அமீரக அரசு அந்நாட்டில் பாஸ்போர்ட் விசா முதலான ஆவணங்கள் இன்றி அங்கு தங்கியுள்ள வெளிநாட்டினர் 01.03.2024 முதல் 30.10.2024 க்குள் எந்தவித தண்டனையோ அல்லது அபராதமோ இன்றி தங்கள் ஆவணங்களை புதுப்பித்துக் கொள்ளலாம் அல்லது தங்கள் நாட்டிற்கு திரும்பி செல்லலாம் என்று ஒரு பொது மன்னிப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது குறித்து தமிழ்நாடு அரசு அயலகத் தமிழர் நலவாரிய உறுப்பினர் எஸ்.எஸ். மீரான் என்பவர் என்னிடம் வழங்கியுள்ள மனுவிலுள்ள கோரிக்கையை தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

அம்மனுவில் அவர் இந்திய நாட்டு குடிமக்கள் சுமார் 15000 பேர் தங்களது ஆவணங்களை இழந்து நம் நாட்டிற்கு திரும்பி வர இயலாமல் அங்கிருந்து திரும்பி வருவதற்கு விமான கட்டணம் செலுத்தவும் வழி இன்றி தவித்து வருவதாகவும் அவர்களை இந்திய அரசு இந்திய தூதரக அதிகாரிகள் மூலம் மீட்டெடுத்து, அவர்கள் திரும்பி வருவதற்கான விமானப் பயண கட்டணத்தையும் ஏற்றுக் கொண்டு நம் நாட்டிற்கு அழைத்து வர வேண்டுமென்று வேண்டிக் கேட்டுள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகம் செய்துள்ள இந்த அறிவிப்பு அங்கு சிக்கிக் கொண்டுள்ள நமது குடிமக்களை மீட்டு வருவதற்குக் கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பாகும். இது போன்ற அந்த அரசு 2018 ஆம் ஆண்டில் வழங்கி இருந்த பொது மன்னிப்பு அறிவிப்பைத் தொடர்ந்து சுமார் 15000 இந்தியக் குடிமக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த அறிவிப்பிற்குப் பிறகு கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டிருந்த 2020-22 ஆண்டுகளில் அங்கு பணியாற்றிக் கொண்டு வந்த இந்தியக் குடிமக்கள் பலர் தாங்கள் செய்து வந்த வேலையிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் அவர்கள் நமது நாட்டிற்குத் திரும்பி வரத் தேவையான பாஸ்போர்ட்டை இழந்தோ அல்லது அங்குப் பணியாற்றுவதற்குத் தேவையான விசாக் காலம் முடிந்து விட்டதாலோ அங்கேயே சிறு சிறு எடுபிடி வேலைகள் செய்து போதிய வருவாய் இன்றித் தவித்து வருகின்றனர்.

ஐக்கிய அரபு அமீரக அரசு இதுபோன்ற தவிக்கும் வெளிநாட்டினரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்திய தூதரகமும் இது போன்ற மக்களுக்கு உதவிகள் செய்திட முகாம்கள் அமைத்துள்ளது. ஏறத்தாழ 500 முதல் 1000 தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய தமிழ் குடிமக்கள் உள்ளிட்ட சுமார் 15000 இந்தியர்கள் அங்கு தக்க ஆவணங்களின்றி தங்கி இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த பொன்னான வாய்ப்பினைப் பயன்படுத்தி அந்நாட்டில் தக்க ஆவணங்கள் இன்றி சிக்கித் தவிக்கும் இந்தியக் குடிமக்களை மீட்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்களை மீட்டு வருவதற்குத் தேவையான விமானக் கட்டணம் உள்ளிட்ட செலவுகளை ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டு நமது குடிமக்களை நமது நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கும்படி தங்களை கேட்டுக் கொள் கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர்.கலாநிதி வீராசாமி கூறியுள்ளார்.


### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு

## ஒன்றிய, நகர, பேரூர் அளவிலான அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும் விவரம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் அறிவிப்பு!



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்களின் அறிவுறுத்தலின்படி நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் அளவிலான அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள், பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழக தோழர்கள் கீழ்க்கண்ட விதிமுறைகள் படி விண்ணப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு/பட்டயப்படிப்பு நிறைவுசெய்தவர்களாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதியின் வாக்காளர்களாக இருந்தல் வேண்டும்.
3. ஒரு அமைப்பாளர், ஐந்து துணைஅமைப்பாளர்கள் (பெண்உட்பட) நியமிக்கப்படும்.
4. விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டுள்ள QR Code மூலம்பொறியாளர் போர்ட்டல் வழியே மட்டும் விண்ணப்பிக்கவேண்டும்.
5. மண்டல அளவில் விண்ணப்பதாரர்களை அழைத்து நேர்காணல் செய்துதேர்வு செய்யப்படும்.

மேற்கண்ட விதிமுறைகளின்படி நமது ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட பொறியாளர் அணியின் நிர்வாகிகள் புதிய நிர்வாகிகளுக்கான விண்ணப்பங்களை இணைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.எம்.மதுரா செந்தில்**

செயலாளர், நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.


### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# ‘திராவிட மாடல்’ ஆட்சி 2026-லும் தொடர அயராது உழைப்போம்!

## தி.மு.கழக அயலக அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, செப். 27 -

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும் கழக இளைஞரணி செயலாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு திராவிட முன்னேற்ற கழகத்தின் அயலக அணியினர் மாநில நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள ஜே.பி. ஓட்டலில் கழக அயலக அணித்தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினரும் கழக அயலக அணியின் மாநில செயலாளருமான எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து முன்னாள் கழக துணை பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான க.சுந்தரம் அவர்களின் மறை விற்கு கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் 40/40 இந்தியாவிலேயே 100 சதவீதம் வெற்றியைப் பெற்றுத் தந்த கழக தலைவருக்கும் சின்னவருக்கும் நன்றி தெரிவித்தனர்.

மேலும் கழக ஆக்க பணிகள் மற்றும் கழக பவள விழா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா விழுப்புரம் மாவட்டம் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடத்துவது என்றும் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிறந்த நாளை பல்வேறு வெளிநாடுகளிலும் தமிழகம் அளவில் மாவட்ட, மாநகர, பகுதி, பேரூர், ஒன்றியம் வாரியாக கொண்டாடுவது எனவும் மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகளை நியமிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் அரசின் பொற்கால ஆட்சி தொடர வரவிருக்கும் 2026 சட்டமன்ற பொது தேர்தலுக்காக அயராது உழைத்து மீண்டும் ஆட்சியை பொறுப்பேற்று செய்திட கழக அயலக அணியினர் அயராது உழைத்திட வேண்டும் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக அயலக அணியின் இணை செயலாளர்கள் எஸ்.செந்தில்குமார், வழக்கறிஞர்கள் பி.புகழ் காந்தி, மனுராஜ் சண்முக சுந்தரம், கழக அயலக துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் பரிதி இளம்சுருதி, சே.உமா ராணி, விஜயன் ராமகிருஷ்ணன், கன்னிகை ஸ்டாலின், முத்து வேல் ராமசாமி, சேகர் ஜெ. மனோகரன், குமரி பாபு வினிபிரட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# இன்று - சி.பா. ஆதித்தனார் பிறந்த நாள்!

## திருவுருவப் படத்திற்கு அமைச்சர்கள் மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

சென்னை, செப். 27 -

சி.பா. ஆதித்தனார் அவர்களின் 120வது பிறந்த நாள் இன்று (27.9.2024) கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், இன்று (27.9.2024) காலை 9.30 மணியளவில் சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலை அருகே வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

சி.பா.ஆதித்தனார் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள காயாமொழி என்கிற கிராமத்தில் 1905 ஆம் ஆண்டு பிறந்தவர். செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டில் சட்டப்படிப்பு முடித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். கல்லூரியில் படிக்கின்ற நாள் களிலேயே சிறு தொழில்கள் செய்து முன்னேறுவது குறித்துப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.

1942ஆம் ஆண்டு முதன் முதலாக, ‘மதுரை முரசு’ என்ற வாரம் இருமுறை இதழையும், பின்னர் ‘தமிழன்’ என்ற வார இதழையும் தொடங்கினார். யாருக்கும் அஞ்சாமல் உண்மை செய்திகளை வெளியிட வேண்டும் என்கிற கொள்கைப் பிடிப்பின் காரணமாக, இவரது பத்திரிகையை ஆங்கில அரசு தடை செய்தும் கூட, தன் கொள்கையை மாற்றிக் கொள்ளாதவர் இவர்.

1942ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மதுரையில் ‘தினத்தந்தி’ நாளிதழை தொடங்கி வெளியிட்டார். தொடர்ந்து, ‘மாலை மலர்’ என்ற மாலைப் பத்திரிகையையும் ‘ராணி’ என்ற வார இதழையும் தொடங்கினார். 1947ஆம் ஆண்டில் ‘தினத்தாள்’ பத்திரிகையும், அடுத்த ஆண்டில் ‘தினத் தூது’ பத்திரிகையையும் தொடங்கினார். பத்திரிகைகளில் மக்கள் படித்துப் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் தமிழ்ச் சொற்கள், சிறிய வாக்கியங்கள், கவர்ந்திழுக்கும் தலைப்புகள், கருத்துப் படங்கள் உள்ளிட்ட உத்திகளைக் கையாண்டு தமிழ்ப் பத்திரிகை உலகில் புதுமைகளைப் புகுத்தினார்.

இவரது நாளிதழில் ஏராளமான படங்களுடன் செய்திகளை வெளியிட்டு தமிழ் இதழியல் துறையில் முத்திரைகள் பதித்தார். 1942ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டப்பேரவை மேலவை உறுப்பினராகவும், 1957ஆம் ஆண்டு முதல் 1962ஆம் ஆண்டு வரை சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

1967ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பணியாற்றினார். அப்போது, சட்டப் பேரவை விதிகள் ஆங்கிலத்தில் இருப்பது பொருத்தமாக இருக்காது என்பதை அறிந்து தமிழில் மொழிபெயர்த்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின் 1969ல் கூட்டுறவு மற்றும் விவசாயத் துறை அமைச்சராகவும் திறம்படப் பணியாற்றினார்.

சி.பா.ஆதித்தனார் அவர்கள் ஏடு நடத்துவோர்க்கும், எழுத்தாளர்களுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரின் பிறந்த நாளான செப்டம்பர் 27ஆம் நாள் அரசு விழாவாகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின்பிரநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# சென்னை மாநிலக் கல்லூரியில் தேவநேயப் பாவாணர் விழா!

## மலேசிய தமிழ்நெறிக் கழகத் தலைவர் இரா.திருமாவளவனார் சிறப்புரை!

சென்னை, செப். 27 -

சென்னை மாநிலக் கல்லூரியில் ‘தமிழும் பாவாணரும்’ என்னும் தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.தாமரைக்கண்ணன் வரவேற்புரை ஆற்றினார். மாநிலக் கல்லூரி முதல்வரும் கல்லூரிக் கல்வி இயக்கக இணை இயக்குநருமான முனைவர் இரா. இராமன் தலைமை தாங்கினார்.

மலேசியத் தமிழ்நெறிக் கழகத் தலைவரும் மலேசிய அரசின் கலைச்சொல்லாக்கக் குழுத் துணைத்தலைவருமான தமிழறிஞர் இரா.திருமாவளவனார், பாவாணர் குறித்த செறிவான பேருரையை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை ந.அருள், முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்கக இணை இயக்குநர் அ.மதிவாணன், பாவேந்தர் விருதாளர் வாலசாவல்லவன் முதலிய பலரும் விழாவில் பங்கேற்றனர்.

கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் பேசும் போது , மாநிலக் கல்லூரி வளாகத்தில் பாவாணருக்குச் சிலை விரைவில் அமைக்கப் பட உள்ள செய்தியை அறிவித்தார். பாவாணர் சிலையோடு அவர்பெயரில் 200 பேர் அமரும் வகையில் குளிரூட்டப்பட்ட அரங்கமும் பாவாணர் கோட்டமும் தமிழ்வளர்ச்சித் துறையால் இதே வளாகத்தில் உருவாக்கப்படும் என்று தெரி வித்தார்.



திராவிட முன்னேற்ற கழகத்தின் அயலக அணியின் மாநில நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் திராவிட முன்னேற்ற கழக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும் கழக இளைஞரணி செயலாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு திராவிட முன்னேற்ற கழகத்தின் அயலக அணியினர் மாநில நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள ஜே.பி. ஓட்டலில் கழக அயலக அணித்தலைவரும் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினரும் கழக அயலக அணியின் மாநில செயலாளருமான எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் கழக அயலக அணியின் இணை செயலாளர்கள் எஸ்.செந்தில்குமார், வழக்கறிஞர்கள் பி.புகழ் காந்தி, மனுராஜ் சண்முக சுந்தரம், கழக அயலக துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி, சே.உமாராணி, விஜயன் ராமகிருஷ்ணன், கன்னிகை ஸ்டாலின், முத்துவேல் ராமசாமி, சேகர் ஜெ.மனோகரன், குமரி பாபு வினிபிரட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.